Vidyodaya Journal of Humanities and Social Sciences

VJHSS (2024), Vol. 09 (02)

# The Public Trust in Representative Democracy: A Study Based in Batticaloa District, Sri Lanka

## பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது மக்களின் நம்பிக்கை: மட்டக்களப்பு மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

V. M. Rilwan

Center for the Study of Human Rights, University of Peradeniya, Sri Lanka

**Article Info**

Article History:
Received 09 Feb 2024
Accepted 08 Oct 2024
Issue Published Online
01 July 2024

**Key Words:**
Public Trust
Government Accountability
Political Participation
Government Transparency
Representative Democracy

*Corresponding author
E-mail address:
rilwanrain203@gmail.com

https://orcid.org/0009-0007-4113-7440

Journal homepage:
http://journals.sjp.ac.lk/index.php/vjhss

http://doi.org/10.31357/fhss/vjhss.v09i02.14

VJHSS (2024), Vol. 09 (02), pp. 214-233

ISSN 1391-1937/ISSN 2651-0367 (Online)

CC BY

Faculty of Humanities and Social Sciences 2024

## ABSTRACT

*Most countries in the world have a democratic system of government. Debates on representative democracy and public trust have continued for decades. Today, people's faith in representative democracy is waning. Thus, the main objective of this study is to examine people's trust in representative democracy in Batticaloa district. It also aims to explore the reasons for the decline in trust in representative democracy. This study is based on primary and secondary data. A questionnaire method consisting of interviews and structured questions was also used to collect the first-level responses. According to the analysis carried out, the study revealed that the people's confidence in representative democracy is low in Batticaloa district. The economy and the failure of representative democracy have been found to be the main factors behind low public confidence in representative democracy. Increased corruption, non-conduct of elections, non-election of the president through new elections, family rule, abuse of power, majoritarianism, flawed government policies, weakness of the government structure have been found to be the reasons for the decrease in people's confidence. This study highlights the many challenges that representative democracy has faced, and their causes, and solutions. As such, this study emphasizes that people's trust in representative democracy can be established when mechanisms such as government transparency, establishing political trust, holding elections in a timely manner, promoting direct democratic strategies, establishing government accountability, and providing opportunities for people and civil society to participate in political activities are implemented.*

## 1. ஆய்வு அறிமுகம்

ஜனநாயகத்தின் ஒரு வடிவமான பிரதிநிதித்துவ ஜனநாயகம் மன்னராட்சியின் சர்வாதிகாரத்திற்கு எதிராக 17ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சியின் ஊடாக வளர்ச்சியடைந்த ஒன்றாகும் (சர்ஜூன் & றிபான், 2012). ஜனநாயகத்தின் முக்கிய அம்சமான தேர்தல்கள் அரசாங்கத்தின் சட்டத்தன்மையை உறுதி செய்யவும், மக்கள் நம்பிக்கையுடன் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளவும் அவசியமாகின்றன (ரமேஸ், 2022). பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது இன்று உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஜனநாயக அரசாங்கத்தின் ஒரு வடிவமாகும். இன்று கோட்பாட்டு ரீதியாக பயன்படுத்தப்படும் ஒன்றாகவும் பிரதிநிதித்துவ ஜனநாயகம் காணப்படுகிறது.

பொதுவாக, ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க அமைப்பாகும், இதில் எந்த சட்டங்களை இயற்றுவது அல்லது யார் வழிநடத்த வேண்டும் என்பது பற்றி மக்கள் அரசியல் முடிவுகளை எடுக்கிறார்கள். மக்களாட்சியை அடிப்படையாகக் கொண்ட நவீன ஜனநாயகத்தின் மாதிரியான பிரதிநிதித்துவ ஜனநாயகம், மக்கள் பங்கு, அதன் மீதான மக்கள் நம்பிக்கை என்பன குறித்து விவாதங்கள் பல தசாப்தங்களாக உள்ளன (Tormey, 2006).

இன்று பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையிழப்பு அதிகரித்து வருகின்றன. இதனால் போராட்டங்கள் பல நாடுகளில் வலுப்பெறுகின்றன (Anjali, 2022). இன்று மியன்மார், இலத்தீன் அமெரிக்க நாடுகள், இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஏற்படும் போராட்டங்கள் பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இழப்பாகும் (ரமேஸ், 2022). ஆகவே, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைக் கண்டறிவதை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

இலங்கையின் வரலாற்று அரசியல் மாற்றங்களில் ஜனநாயகத்தை விட்டு பின்வாங்கும் வகையான எதேச்சதிகார இலக்குகள் கொண்டதாக அரசாங்கம் அமையும் போதெல்லாம் எதிர்ப்பு தோற்றம் பெற்று இறுதியில் ஜனநாயகத்தின் பின்னடைவை அதிகரிக்கும் மறுமலர்ச்சி ஒன்று உருவாகிவிடுகிறது (Uyangoda & Peiris, 2005).

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறித்த பிரச்சினைகள் அண்மைக்காலமாக பாரிய அதிகரிப்பினை காட்டுகின்றன (Rambukwella, 2022). ஒரு ஜனநாயகத்தில் வினைத்திறன் மிக்க பங்குபற்றலுக்கான போதியளவு சந்தர்ப்பம் ஒரு பிரஜைக்கு மறுக்கப்பட்டால் அதன் பொருள் அவர்களுடைய விருப்பங்கள் பற்றி தெரியாது அல்லது அவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அவர்களின் விருப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லையானால் அவர்களுடைய ஆர்வம் பற்றிய சம கணிப்புக் கோட்பாடும் மறுக்கப்படுகின்றது (Donald, 1995). பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறித்த பிரச்சினைகள் அண்மைக்காலமாக பாரிய அதிகரிப்பினை காட்டுகின்றன (Rambukwella, 2022).

ஏனெனில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நம்பிக்கையை குறைக்க பல செயற்பாடுகள், மோசடிகள் உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்கு பின்னர் அதிகம் உருவாகின (Anjali, 2022). இதனால் பிரதிநிதித்துவ ஜனநாயகம் நெருக்கடியில் மற்றும் தோல்வியடையும் அபாயத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. அதாவது உலகளாவிய ஜனநாயகத்தின் சமீபத்திய நிலை சரிவையும், தேக்கத்தையும் ஏற்படுத்துகின்றன (Thompson, 2015).

இதனால் மக்களுக்கு அரசியல் நம்பிக்கை அவசியமாவதுடன் அது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் செயற்றிறனை அதிகரிக்கும். அந்த வகையில் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை, செயற்றிறன் என்பவற்றை ப்ரீடம் ஹவுஸ்(Freedom House) தரவுகளாக வெளிப்படுத்துகின்றன. அரசியல் பங்கேற்பின் முக்கிய அம்சமாக வாக்குரிமை காணப்படுகின்றது (Dunleavy & O'Leary, 1987). மக்கள் பிரதிநிதிகள் வாக்காளர்களுக்குப் பொறுப்புக்கூறக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இது மக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் இருக்கக் கூடிய இடைத்தொடர்பின் மூலமே உருவாக்க முடியும் (Thanaraj, 1996).


நம்பகத்தன்மை, நேர்மை, திறமை, அதன் கொள்கை வகுப்பில் வெளிப்படைத்தன்மை என்பன அரசியல் நம்பிக்கையை தீர்மானிக்கும் காரணிகளாக அமைகிறது. ஒரு கருத்தியல் மற்றும் கோட்பாடு என்ற அடிப்படையில் அரசியல் நம்பிக்கை என்பது ஒவ்வொரு நிறுவனத்திற்கும்-பொறுப்பான அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு இடையேயான ஆதரவின் இடைநிலைக் குறிகாட்டியாகவும், ஜனநாயகத்தின்

மேலோட்டமான கொள்கைகளாகவும் கருதப்படுகின்றன.

அரசியல் நம்பிக்கை என்பது எந்த ஒரு நல்ல ஜனநாயக சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். கடந்த காலங்களில் இலங்கை **"ஜனநாயகப் பின்வாங்கல்"** என்ற ஆபத்தில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது (IDEA- GSoD Report, 2021). அந்தவகையில் இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்வதாக உள்ளது.

### 1.2. ஆய்வுப் பிரச்சினை

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயகமானது மூன்றாம் உலக நாடுகளில் தோல்வியடைந்து வருகின்றன (Kevin, 2019). பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை நீண்ட காலமாக பின்பற்றும் இலங்கையில் அண்மைக்காலமாக அரசியல் நம்பிக்கை நலிவடைந்து செல்வது பிரச்சினையாக உள்ளது (Uyangoda, 2022). அதேநேரம் ஜனநாயகப் பண்புகளை இனங்காண்பது அரிதாக உள்ளதுடன், ஜனநாயக மீறல்களை ஏற்படுத்தும் அரசியல் நிலையும் காணப்படுகின்றமை பிரச்சினையாக உள்ளது.




**ஒளிப்படம் 01.** கருத்தமைவு கட்டமைப்பு

அரசியல் நம்பிக்கையானது ஜனநாயக ஆட்சிக்கு அவசியமான முன்நிபந்தனையாகக் கருதப்படுவதால் நம்பிக்கையின் வீழ்ச்சியானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தரத்தை அடிப்படையில் சவால் செய்வதாக கருதப்படுகின்றது (Van der Meer, 2017). ஜனநாயகமானது பொறுப்புள்ள மற்றும் பொறுப்பான நிர்வாகம், சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், குடிமக்கள் பங்கேற்பு மற்றும் தேர்தல் செயன்முறைகள் மூலம் அதிகாரத்தை அமைதியான முறையில் மாற்றுவதை உள்ளடக்கியது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வி, ஊழல், நீதியின்மை, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின்மை, பொறுப்புக்கூறலின்மை

போன்ற பல விடயங்கள் காரணமாகின்றது (Ortiz et al., 2002). சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் ஜனநாயகம் நாட்டின் அரசியல் உயர்குலாமினரின் பல்வேறு பிரிவுகளால் துஸ்பிரயோகம் மற்றும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. மக்கள் நம்பிக்கை பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது கேள்விக்குறியாகின்றது. இதனால் மக்களின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை குறைவாக உள்ளது. இவ்வாறு மக்களின் நம்பிக்கை நிலை எவ்வாறு காணப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ளுதல் இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது.

### 1.3. ஆய்வு வினாக்கள்

01. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை எவ்வாறு காணப்படுகின்றது?
02. பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கும் சவால்கள் எவை?

### 1.4. ஆய்வு நோக்கங்கள்

01. மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கையை கண்டறிதல்
02. மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கும் சவால்களை இணங்காணல்.

### 1.5. ஆய்வின் கருதுகோள்

01. **H1**: தற்காலத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது.
02. **H2**: தற்காலத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைந்துள்ளது.

### 1.6. ஆய்வு முக்கியத்துவம்

பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி நீண்ட வரலாற்றைக் கொண்டதாக காணப்படுகிறது. இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் நீண்ட காலமாக வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. தற்காலத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளது. அரசாங்கமானது மக்களுக்கு பொறுப்புக்கூறல், சிறந்த செயற்றிறன், வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவது அவசியமாகும். அந்த வகையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம், அதன் வளர்ச்சி தொடர்பான ஆய்வுகள் பல இடம்பெற்றன.

ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனநாயகம் மீதான மக்களை நம்பிக்கை எவ்வாறு காணப்படுகிறது என்பதை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகள் எதுவும் இடம்பெற்றமைக்கான அனுபவரீதியான ஆதாரமோ, ஆய்வுகளோ பொதுவாக இல்லை என்பதை அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வு எதிர்காலத்தில் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கை தொடர்பில் ஆய்வு செய்வதற்கு பயன்படுத்தக்கூடியதாக அமைந்திருப்பதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

பண்புசார் தகவல்களும் அளவுசார் தகவல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டு கலப்பு முறையே இவ்வாய்வின் அணுகுமுறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு முறையியல் பிரதானமாக இரண்டு அம்சங்கள் காணப்படும்.


1. தரவு சேகரிப்பு முறை
2. தரவு பகுப்பாய்வு முறை


## 2.1 தரவு சேகரிப்பு முறை

இதன்படி மிகவும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை, மக்கள் பங்குபற்றல், அரசாங்க பொறுப்புக்கூறல், செயற்றிறன் குறித்து ஆராயப்பட்டுள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கிராமத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் போன்றவர்கள் நேர்காணல் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எளிய எழுமாற்று முறையின் படி இனம், வயது அடிப்படையாகக் கொண்டு 75 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வினாக்களின் மூலம் தகவல்கள் பெறப்படும் முறையானது வினாக்கொத்து முறையென அழைக்கப்படும். இவ்வாய்வுக்காக மூடிய, திறந்த கட்டமைக்கப்பட்ட வினாக்களை கொண்ட வினாக்கொத்து முறை மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இனம், பால்நிலை, கல்வியறிவு, பதவி நிலை என படையாக்கப்பட்டு 50 பேரிடம் படையாக்கப்பட்ட மாதிரியெடுப்பு மூலமாக Google Form மூலமாக தகவல்கள் பெறப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளானது ஆய்வாளன் நேரடியாக களத்துக்கு

செல்லாது நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன மூலமாக பெறப்படுபவையாகும்.

ஆகவே இவ்வாய்வுக்கு நிகழ்தகவு மாதிரி எடுப்பிலிருந்து எளிய எழுமாற்று மாதிரி எடுப்பும், படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தகவல் தருணர்கள் தெரிவு செய்யப்பட்டும் தகவல்கள் பெறப்பட்டுள்ளது.





## 2.2 தரவுப்பகுப்பாய்வு

இவ்வாய்வு முதலாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளானது, தெரிவு செய்யப்பட்ட 75 தகவல் தருணர்களை நேர்காணல் செய்ததன் மூலமும் 50 தகவல் தருணரிடம் வினாக்கொத்து

(Google Form) விநியோகிக்கப்பட்டதன் மூலமும் பிரதேச மக்களின் ஜனநாயக ரீதியான ஈடுபாடு மற்றும் பங்குபற்றலை அவதானித்தல் என்பவற்றின் ஊடாகவும் இவ்வாய்விற்காக சேகரிக்கப்பட்டன. பண்புசார் தரவுகள் நேர்காணல் ஊடாகவும், அளவுசார் தரவுகள் வினாக்கொத்து ஊடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டு கலப்பு முறையே இவ்வாய்வின் ஆய்வு அணுகுமுறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நேர்காணல் ஊடாக சேகரிக்கப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வு மூலமும், வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வு மூலமும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




**மூலம் 02.** மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், கிழக்கு மாகாணம், இலங்கை

## 2.3 ஆய்வு வரையறை

இந்த ஆய்வின் வரையறையில் விடய ரீதியான வரையறையாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான பல விடயங்கள் காணப்பட்டாலும் மக்கள் நம்பிக்கை, அரசாங்க செயற்றிறன் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீது மக்கள் நம்பிக்கையை எவ்வாறு காணப்படுகின்றது என்ற விடயத்தை மாத்திரம் ஆய்வு செய்வதாக அமைகின்றது. காலவரையறையாக, 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையான (2024, January) காலப் பகுதி தெரிவு செய்து குறித்த காலப் பகுதியில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கை குறித்து ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதேச வரையறையாக மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆராய்கின்றது.

## 2.4 ஆய்வு பிரதேசம்

இலங்கை இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கீழ் கரைக்கு அப்பால் இந்தியப் பெருங்கடலில் ஏறத்தாழ 22.16மில்லியன் மக்கள் வாழும் ஒரு தீவு நாடு ஆகும். (World bank, 2023). இங்கு 9 மாகாணங்களும், 25 மாவட்டங்களும் காணப்படுகிறது. அதேநேரம் 331 பிரதேச செயலகப் பிரிவு காணப்படுகிறது (Grama Niladhari Administration Division, 2016). இலங்கையில் விவசாயம், மீன்பிடி, சேனை பயிர்ச்செய்கை, மட்பாண்ட உற்பத்திகள் என்பன பிரதான தொழில்களாக உள்ளது. சமதரையான மண், மலைப்பாங்கான இடங்கள் என்பவற்றை கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையின் 25 மாவட்டங்களில் ஒன்றாகும். இது கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு நகரம் இதன் தலைநகரமாகும். மட்டக்களப்பு மாவட்டம் 3 நாடாளுமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ளது. இது 346 கிராமசேவகர் பிரிவுகளையும் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது (District Secreatariat- Batticaloa). மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர்கள்- 6797, தமிழர்கள்- 383008, முஸ்லிம்கள்- 133854, கிறிஸ்தவர்கள் மற்றும் ஏனையோர்- 2908 போன்ற இனங்கள் வாழ்கின்றனர். இந்த வகையில் ஆய்வுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தை ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## இலக்கிய மீளாய்வு

இவ்வாய்வின் ஆய்வு இடைவெளி, ஆய்வுப்பிரச்சினை என்பவற்றை இனங்கண்டு இந்த ஆய்வினை சிறப்பான முறையில் கொண்டு செல்ல, ஆய்வு நோக்கத்தை அடைய இலக்கிய மீளாய்வு அவசியமாகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை என்ற ஆய்வினை ஆய்வு செய்வதற்காக இலக்கிய மீளாய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் ஏதேனும் வழுக்கள், பிழைகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதுடன், எழுதப்படும் ஆய்வுக்கட்டுரை சிறப்பானதாக அமையவும் உதவுகின்றது. இவ்வாய்வினை தொடங்குவதற்கு முன் இக்காலம் வரை பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோற்றம், வளர்ச்சி, போக்கு, மக்களின் நம்பிக்கை, அரசாங்க பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, அது எதிர்நோக்கும் விமர்சனங்கள், பொறுப்புக்கூறல் முறைகள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக தோன்றிய பொருத்தமான புலமைசார் வெளியீடுகளை, எழுத்தாக்கங்களை மீளப்பார்ப்பது முக்கியமாகும். அவற்றை இங்கு நோக்குவோம்.

Ortiz et al. (2002) எழுதிய "*World protests: A study of key protest issues in the 21st century*". எனும் நூலானது உலகில் 2006 முதல் 2020 வரை இடம்பெற்ற மக்கள் போராட்டம் குறித்து ஆராய்கிறது. குறிப்பாக உலகில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்டம், அதற்கான காரணங்கள் பலவற்றை ஆராய்கிறது. அதே நேரம் 101 நாடுகளை ஒரே நேரத்தில் ஆய்வு செய்யும் நூலாக காணப்படுகின்றது. அதே நேரம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வி, ஊழல், நீதியின்மை, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையின்மை, பொறுப்புக்கூறல் இன்மை போன்ற விடயங்களை ஆராய்கிறது. அதேபோல சிவில் உரிமைக்கான போராட்டம், உலகளாவிய நீதிக்கான எதிர்ப்பு போன்ற பல விடயங்களை ஒப்பிட்டு ஆராய்கிறது. இலங்கை குறித்தும் ஒரு சில இடங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் எழுச்சி போராட்டம், அதற்கான காரணங்கள், மக்கள் அரசாங்கம் மீது நம்பிக்கை இழப்பதற்கான காரணங்கள், அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை இழப்பு குறித்த தகவல்களை அறிய முடியும். இவ்வாறான விடயங்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு உதவியாக உள்ளதோடு, மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ள இது உதவியாக இருக்கின்றது.

Van der Meer, (2017) எழுதிய *"Political trust and the crisis of democracy"* என்ற ஆய்வில் அரசியல் நம்பிக்கை மற்றும் ஜனநாயகம் குறித்த தொடர்புகள், அது சார்ந்த விடயங்கள் காணப்படுகின்றன. இதன்படி பல தசாப்தங்களாக, அரசியல் நம்பிக்கை பற்றிய அறிவார்ந்த விசாரணையானது அரசியலில் இடம்பெறுவதுடன், பொதுமக்களின் நம்பிக்கையின் அளவு குறைந்து வருவது பற்றிய சிக்கல்களால் முக்கியத்துவம் பெற்றுள்ளதை கூறுகிறது. அரசியல் நம்பிக்கையானது ஜனநாயக ஆட்சிக்கு அவசியமான முன் நிபந்தனையாக கருதப்படுவதால், நம்பிக்கையின் வீழ்ச்சியானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தரத்தை சவால் செய்வதாக ஆய்வு கூறுகிறது. மேலும் அரசியல் நம்பிக்கை என்பது அரசியல் நிறுவனங்களின் செயல்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் போது அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம் போன்ற அரசியல் நிறுவனங்களுக்கு குடிமக்களின் ஆதரவு குறைந்து போகும் தன்மை காணப்படும் என்கின்றது. மேலும் அரசியல் நம்பிக்கையானது

ஜனநாயக சார்பான ஒன்றாக கருதப்படும் அதேவேளை அது இல்லாதிருப்பது ஜனநாயகத்திற்கு தீங்கு விளைவிக்கும் என வாதிடுகின்றது. அதே நேரம் ஒப்பீட்டு சில நாடுகளை ஆய்வு செய்கிறது. குறிப்பாக மத்திய ஐரோப்பா மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகள் மிகக் குறைவாக அரசியல் நம்பிக்கையில் உள்ளன. 1960கள் மற்றும் 1970களில் நீண்டகால பல ஜனநாயக நாடுகளில் அரசியல் நம்பிக்கை குறைந்து வருகின்றது என்பதற்கான சான்றுகளை ஆய்வானது குறிப்பிடுகின்றது. இது அரசியல் நம்பிக்கையின் அடிப்படையை புரிந்து கொள்ள உதவுவதோடு, அரசியல் நம்பிக்கை இழப்பானது ஊழல், நடைமுறையில் அரசாங்க நேர்மையில் உள்ள குறைபாடு, பொருளாதார செயல்திறன் இன்மை போன்ற காரணிகளால் உருவாகிறது எனக் கூறுகிறது. இதனால் இவை போராட்டத்திற்கு வழிவகுக்கும் என்றும் கூறுகின்றது. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை கண்டறிய உதவியாக அமையும்.

Samaranayake & Satkunanathan, (2023) எழுதிய *"A year after mass protests, Sri Lanka's governance crisis continues"* என்ற கட்டுரையில் மக்கள் போராட்டத்திற்கு பின்னரான நாட்டின் பொருளாதாரம் மெதுவான மற்றும் நிலையான மீட்சியை அடைந்து வருவதாக தோன்றினாலும், அதனை தக்கவைக்க நிர்வாக சவால்களை எதிர்கொண்டிருப்பதுடன், அரசாங்கம் மீதான மக்கள் நம்பிக்கை இழந்து வருவதாக கூறுகிறது. அதேநேரம் மக்கள் ஆதரவு இல்லாத அரசாங்கத்தின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விக்ரமசிங்கவின் அரசாங்கம், கருத்து வேறுபாடுகளை நசுக்கும் மற்றும் ஊடக சுதந்திரத்தையும் குறைக்கும் அடக்குமுறைச் சட்டங்களை இயற்றுவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக கோடிட்டு காட்டுகிறது. அரகலயா மற்றும் ராஜபக்சே பதவி நீக்கம் செய்யப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ள பின்னர், இலங்கையின் அரசியல் நிலை என்ன? என்பதையும், கோரப்பட்ட அரசியலமைப்பு மற்றும் அரசியல் மாற்றங்களை அடைவதில் போராட்டங்கள் வெற்றி பெற்றதா? என்பதையும், நல்லிணக்கம் அல்லது சிறுபான்மை உரிமைகள் மீது ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா? என்பதையும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் பாதிக்கப்பட்ட நிலை குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் ஜனநாயகம், மக்கள் போராட்டத்திற்கான காரணம், அதன் பின்னரான இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சார்ந்த விடயங்களை அறிய உதவுகின்றது. ஆனால் மக்கள் போராட்டத்திற்கு பிறகு பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை குறித்து பேசப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாக கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்ஜுன் & றிபான் (2012) ஆகியோரின் "சமகால அரசியல் எண்ணக்கருக்கள்" எனும் நூலில் ஜனநாயகம் தொடர்பான அடிப்படை அறிமுகத்தை குறிப்பிடுகின்றனர். ஜனநாயகம் என்பது, "எல்லா பிரஜைகளிலும் அதிகாரத்தையும் சிவில் பொறுப்புகளையும் நேரடியாகவோ அல்லது சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமோ நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்கம் ஆகும்" என்கின்றார்கள். அத்துடன் ஜனநாயகமானது அரசாங்கம் பற்றிய தத்துவம், சமூக தத்துவம் போன்ற இரு தத்துவக் கொள்கைகளைக் கொண்டுள்ளது என்கின்றனர். அத்துடன் ஜனநாயகத்தின் பண்புகள் தொடர்பாகவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆய்வுக்கான அறிமுகத்தை தருவதாக உள்ளது.

யோகராஜா, (2020) "சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்" எனும் நூலில் ஜனநாயக ஆட்சி முறை பற்றி கூறும்போது மிக உயர்ந்த அதிகாரத்தை தம்மீதே கொண்டுள்ள மக்களின் அரசாங்கம் ஆகும். மக்கள் இவ்வதிகாரத்தை நேரடியாகவோ அல்லது ஒரு சுதந்திரத் தேர்தல் முறையினடிப்படையில் தம்மால் தெரிவு செய்யப்பட்ட முகவர்கள் மூலமோ பிரயோகிக்கின்றார்கள்". அத்துடன் ஜனநாயக ஆட்சியின் இயல்புகள் மற்றும் இலங்கையில் ஜனநாயக ஆட்சியின் பண்புகள், அதன் வளர்ச்சி போக்குகள் மற்றும் இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறையின் பொருத்தப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிடுகின்றார். அதாவது அவர் குறிப்பிடும் போது "உலகத்தில் குறைந்த குறைபாடுடைய ஆட்சி முறையாக ஜனநாயக ஆட்சி முறையினை அடையாளப்படுத்தலாம். இலங்கைக்கு பொருத்தமான ஆட்சி முறையாக ஜனநாயக ஆட்சி முறை காணப்படுகின்றது" போன்ற ஜனநாயகம் தொடர்பான விடயங்களை குறிப்பிடுகின்றார். இது ஆய்வுக்கான அடிப்படை அறிமுகத்தை வழங்குவதாக உள்ளது.

திருச் செல்வம், (1996) என்பவரின் "ஜனநாயகமும் மனித உரிமைகளும்" எனும் நூலில் ஜனநாயகத்தை வலுப்படுத்தல் பிரதிநித்துவ தேர்தல் முறை சார்ந்த ஜனநாயகத்துக்கு அப்பால்...! எனும் தலைப்பின்

கீழ் குறிப்பிடும் போது, "தென்னாசிய நாடுகள் பலவற்றில் சட்டச் சீர்திருத்தச் செயல்முறையானது சட்டவாக்க செயன்முறையில் அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் சங்கங்கள் மற்றும் ஆர்வம் உள்ள பொதுமக்கள் பங்குபற்றுதல் வாய்ப்பினை வழங்கவில்லை. இது தொடர்பாக ஏற்பட்டுள்ள மிகவும் முக்கிய புத்தாக்கமானது ஒரு சட்ட ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதாகும். இவ்வாணைகுழுவில் அங்கம் வகிக்கும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், சமூக விஞ்ஞானிகள் ஆகியோர் சட்டத்தின் பல்வேறு கிளைகளையும் முறையாக மீளாய்வு செய்து சீர்திருத்துவதற்கான விதந்துரைகள் செய்வர். இலங்கையில் இத்தகைய சட்ட ஆணைக்குழு மிகவும் சுதந்திரமான ஒரு அமைப்பாகும். அது பாராளுமன்றத்திற்கு நேரடியாக விதந்துரைகள் செய்யும் அதிகாரம் கொண்டது. இக்குழுவானது அதன் செயல் முறையில் பொதுமக்களுடனும் குழுக்களுடனும் தனிநபர்களுடனும் கலந்துரையாடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த உறுதிமொழியானது காப்பாற்றப்படவில்லை. சட்ட ஆணைக்குழுவானது பெரும்பாலும் பகுதிநேர ஊழியர்களையே கொண்டிருந்தது. இவர்களால் சீர்திருத்த பணிகளில் ஈடுபடக் கூடிய வலிமை இருக்கவில்லை. அத்துடன் ஆணை குழுவுக்கு சட்டங்கள் மற்றும் அவற்றின் பாதிப்புகள் பற்றி ஆய்வு செய்து உதவக்கூடிய ஆய்வாளரின் ஆதரவும் கிடைக்கவில்லை" என்கின்றார். மற்றும் ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்பு கூறலில் உள்ள பிரச்சனைகள் பற்றியும் இவர் குறிப்பிடுகின்றார். இவருடைய கருத்துக்கள் இந்த ஆய்வுக்கு மிகவும் உதவியாக உள்ளதோடு ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பிரதிநிதித்துவ தேர்தல் முறை சார்ந்த ஜனநாயகத்திற்கு அப்பால் எனும் விடயம் ஆய்விற்கு உதவியாக உள்ளது. ஆனால் இவர் கூறிய விடயங்கள் மக்களின் ஜனநாயக நம்பிக்கை மற்றும் ஜனநாயகம் எதிர் நோக்கும் சவால்களை ஆய்வு செய்ய இவரின் கருத்துக்கள் உதவியாக உள்ளது.

மாற்றுக் கொள்கைக்கான தனது "யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் ஜனநாயகம்" எனும் ஆய்வு தலைப்பில் (17 ஆகஸ்ட் 2011) யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் ஜனநாயகம் எனும் ஆய்வில் இன்று இலங்கையில் உள்ள ஜனநாயகம் தொடர்பில் மக்களின் கருத்து, ஜனநாயகம் என்றதும் மக்கள் என்ன பொருள் கொள்கிறார்கள், அதில் எவ்வாறு பங்கேற்கிறார்கள், அவர்களின் பங்கேற்பு மற்றும் ஆட்சி கட்டமைப்புகள் மற்றும் சில முக்கியமான நிறுவனங்கள் தொடர்பிலான நம்பிக்கை போன்றவற்றை ஆராய்வதாக உள்ளது. இந்த ஆய்வில் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு பற்றியும் அதாவது அரசியல் யாப்புச்சீர்திருத்தம் மேற்கொள்வது தொடர்பான கணக்கெடுப்பினை இவர்கள் மேற்கொண்டுள்ளதோடு, மேலும் அவர்கள் குறிப்பிடும்போது, தற்போதைய அபிவிருத்தி செயல்பாடுகளில் முதன்மையானதாக காணப்படுவது வாழ்க்கைச் செலவு குறைவடைதலே எனும் கருத்தினை நான்கு இனத்தவர்களும் கொண்டுள்ளனர். சிங்கள சமூகத்தை பொறுத்தவரை, அபிவிருத்தி செயல்பாடுகளில் காண விரும்புவதில் இரண்டாவது தெரிவாக உட்கட்டமைப்பு மேம்படுத்தல் அமையும் அதேவேளை, மற்றைய மூன்று சமூகத்தவர்களுக்கும் வேலைவாய்ப்பின்மை மற்றும் மேலதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் இரண்டாவது தெளிவாக அமைகின்றது. என்பதுடன் இலங்கையர்களில் 65 சதவீதமான மக்கள் பெரும்பான்மையாக சிங்கள சமூகத்தவர்கள் நாடு மிக விரைவாக அபிவிருத்தியடைவதாக இருந்தாலும், ஊழல் எனும் விடயத்தை அலட்சியப்படுத்த முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ளனர். பொருளாதார விடயத்தில் அரசாங்கம் திறமையாக செயல்படுவதில்லை என 26.2 சதவீதமான சிங்களவர்கள், 24 சதவீதமான தமிழர்கள், 18.4 சதவீதமான மலையக தமிழர்கள், 29.2 சதவீதமான முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர் என்கின்றனர். இந்த ஆய்வானது இந்த ஆய்வுக்கான பிரதான வழிகாட்டியாக அமைவதோடு இந்தப் பிரச்சினைகளின் தீவிர தன்மையினால் மக்களின் ஜனநாயக நம்பிக்கை பற்றிய இவ்வாய்வுக்கு மிகவும் உதவியாக அமையும்.


## மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை மற்றும் மக்களின் நம்பிக்கையில் தாக்கம் செலுத்தும் காரணிகளும்

பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது பிரதிநிதிகள் ஊடாக நடத்தப்படும் ஜனநாயக முறையாக காணப்படுகிறது. அதேநேரம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கீழ் அரசாங்கமானது காலத்துக்கு காலம் மக்களுக்கு பொறுப்புக்கூறல் வேண்டும். அவர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள், வெளிப்படைத்தன்மையின்மை, ஊழல் என்பதற்கு அப்பாற்பட்டு அறிவு பூர்வமாகவும், கால சூழ்நிலைக்கு பொருத்தமாகவும், செயற்றிறன் மிக்கதாகவும், செயற்பட வேண்டும். அவ்வாறு அரசாங்க செயற்பாடுகள் பொறுப்பு வாய்ந்த வகையில் அமையும் போது, அதன் மீதான மக்களின் அரசியல் நம்பிக்கை நிலையானது


அதிகரிக்கும். இலங்கையைப் பொறுத்தவரை, தற்போதைய நெருக்கடியானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் உள்ள 03 பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகிறது.

1. நிறைவேற்று அதிகாரத்தையும் பாராளுமன்ற ஜனநாயகத்தையும் நிறைவேற்று அதிகாரத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இணைத்தல்.
2. பாராளுமன்றம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பது.
3. பாராளுமன்றத்தின் தரம் மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் தோல்வியாகும் என குறிப்பிடுகின்றனர்.

அந்தவகையில் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் குறித்த மக்கள் அறிவு அதிகமாக இருப்பதை அறிய முடிகிறது. பிரதிநிதித்துவ ஜனநாயகம் குறித்த மக்கள் அறிவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மற்றும் வினாக்கொத்து வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம். இதன்படி **பிரதிநிதித்துவ ஜனநாயகம் பற்றி அறிந்துள்ளீர்களா?** என்ற வினாவிற்கு **90 சதவீதமானவர்கள் அறிந்துள்ளதுடன், 10 சதவீதமானவர்கள் அறியவில்லை** என பதில் அளித்துள்ளனர் (**வரைபடம் 03**). இதன் மூலம் ஆய்வுக்குரிய மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான மக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகம் பற்றி அறிந்துள்ளார்கள்.




**வரைபடம் 03.** பிரதிநிதித்துவ ஜனநாயகம் பற்றி மக்களின் அறிவு நிலை




**வரைபடம் 04.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை நிலை

பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகள் இலங்கையில் தொடர்ந்து காணப்பட்டது. குறிப்பாக தொடர்ச்சியான குடும்ப ஆட்சி முறை, ஊழல், வேலைவாய்ப்பின்மை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலின்மை போன்ற பிரச்சினைகள் காணப்பட்டது.

இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் சமூகவியல் உறவுமுறை காணப்படுகின்றது. குறிப்பாக அரசியல் சார் உறவுமுறை, இனம், சாதி, மொழி ரீதியான பாகுபாடுகள் தொடர்ச்சியாக உள்ளது. பிரதிநிதித்துவத்தின் வளர்ச்சி என்பது இலங்கையில் டொனமூர் யாப்பில் சர்வஜன வாக்குரிமையுடன் ஒவ்வொரு மக்களும் தங்களுக்கான பிரதிநிதிகளை சர்வஜன வாக்குரிமையின் ஊடாக மக்கள் தெரிவு செய்தனர். 1972 இற்கு பின்னரான காலப்பகுதியில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகள் அதிகமாக காணப்பட்டது.

1978 இற்கு பின்னர் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகளை வெளிப்படையாக பார்க்கக் கூடியதாக உள்ளது. மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகள் பரவலாக அதிகரிக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது என கருத்து தெரிவிக்கின்றனர்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து ஆய்வின்படி, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை பார்க்கும் போது, மிக அதிகம் என 2 சதவீதமானவர்களும், அதிகம் என 22 சதவீதமானவர்களும், குறைவு என 54 சதவீதமானவர்களும், மிகக் குறைவு என 22 சதவீதமானவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள் (**வரைபடம் 04**). இதன்படி ஒப்பிட்டு பார்க்கையில் **மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவாகவே காணப்படுகிறது** எனலாம்.

மேலுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது **பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது** என கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி அந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளமைக்கான காரணங்களை அடையாளம் காண வினாக்கொத்து மூலமாக ஆய்வு செய்யப்பட்டது. அதற்கான காரணங்களாக, **புதிய தேர்தல் மூலமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படாமை, இலங்கையில் அதிகரித்து வரும் ஊழல்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் பிரவேசம், பிற்போடப்பட்ட தேர்தல் போன்றன மக்கள் நம்பிக்கை குறைவடைய காரணமாகின** என கண்டறியப்பட்டுள்ளது.


தற்போது நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளுகை கட்டமைப்பில் ஏற்பட்ட தொடர் குறைபாடுகளும், பலவீனமான அரசியல் தலைவர்களுமே காரணமென மக்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இவைகளுக்கெல்லாம் பிரதான காரணம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் குறைபாடாகும். மக்கள் தமது பிரதிநிதியினை முறையாக தெரிவுசெய்ய வேண்டுமானால், பிரதிநிதித்துவ ஜனநாயகம் பற்றி மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என நேர்காணலின் போது மக்கள் குறிப்பிட்டனர். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாக, **அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலின்மை, பிரதிநிதித்துவ அரசாங்கம் மீதான நம்பிக்கை குறைவடைந்துள்ளமை, பிரதிநிதித்துவ அரசாங்க செயற்றிறனின் வீழ்ச்சி, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது மக்கள் திருப்தி நிலையில் ஏற்பட்ட தளம்பல், பிரதிநிதித்துவ அரசாங்கத்தில் மக்கள் பங்குபற்றும் வாய்ப்புக்கள் மறுக்கப்படல், சிறந்த பொறுப்புக்கூறலின்மை** போன்றன இவ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது **(வரைபடம் 05)**.

**ஊழல் நிலைமை, மோசமான அரசின் கொள்கைகள், குடும்ப ஆட்சி, மக்களின் பொருளாதார கஸ்டங்கள், பெரும்பான்மைவாதம், ஆட்சி செயற்பாடுகளில் இளைஞர்களை போதியளவாக உள்ளீர்க்கப்படாமை, நாட்டில் ஜனநாயகமின்மை, சர்வாதிகார ஆட்சி, இராணுவமயமாக்கல், ஆட்சியில் பெண்களுக்கு வாய்ப்புகள் போதியளவாக வழங்காமை, இனத்துவ வேறுபாடு** போன்றன மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையில் செல்வாக்கு செலுத்திய காரணிகளாக அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது (**வரைபடம் 06**).


**"பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியே காலி முகத்திடலில் நடைபெற்ற மக்கள்**

**போராட்டத்திற்குக் காரணமாகும்". இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?** என்ற கேள்விக்கு இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனநாயகப் போராட்டம் முதன்முறையாக இடம்பெற்றது இதுவாகும், அடிப்படை பொருளாதார பிரச்சினைகள், அரசியல் ரீதியான ஓரங்கட்டல்கள் போன்றவற்றோடு பெரும்பான்மை இன மக்களும் தமக்கான பிரச்சினைகளுக்கு குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்காக ஒன்று கூடி ஏற்படுத்தப்பட்ட ஒரு போராட்டமாக இது அமைந்துள்ளது என குறிப்பிட்டனர். அத்துடன் போராட்டமானது முழுமையாக மக்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களுக்கான போராட்டம் என்று கூற முடியாது. காரணம் அரசியல் தலையீடுகளானது இப்போராட்டத்தில் உள்ளது.


இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்தின் படி பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியே காலி முகத்திடலில் நடைபெற்ற மக்கள் போராட்டத்திற்கு காரணமாகும் என 44 சதவீதமானவர்கள் உறுதியாக ஏற்றுக் கொண்டுள்ளதோடு 52 சதவீதமானவர்கள் ஏற்றுக் கொள்கின்றேன், 2 சதவீதம் ஏற்கவில்லை, 2 சதவீதம் உறுதியாக ஏற்கவில்லை என பதிலளித்துள்ளனர்**(வரைபடம் 07**). ஆகவே **அநேகமானவர்கள் காலி முகத்திடலில் நடந்த போராட்டத்தினை பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.**




**வரைபடம் 05.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்




**வரைபடம் 06.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள்




**வரைபடம் 07.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியே காலி முகத்திடலில் நடைபெற்ற மக்கள் போராட்டத்திற்குக் காரணமா?


**பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளமைக்கான காரணங்கள் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள்?** என்று நேர்காணலின் போது கேட்கப்பட்டது. அதன் போது மக்கள் பொருளாதார தட்டுப்பாடு ஓரளவு குறைந்துள்ளது. அத்துடன் நெருக்கடி நிலை கொஞ்சம் குறைந்துள்ளது. அரசியல்வாதிகள் மக்களுக்கு பயந்து நிதானமாக செயல்பட ஆரம்பித்துள்ள நிலையை காணக் கூடியதாக உள்ளது. அத்துடன் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. அரசியல்வாதிகள் மாற்றம் அடையவில்லை. அரசியலில் உள்ள அதே பிரச்சினைகள், ஊழல்கள் இல்லாமல் இல்லை இருந்து கொண்டே உள்ளது. மக்களின் தனிப்பட்ட மாற்றம் வராதவரை அரசியல் மாற்றம் இதுவும் ஏற்படாது என்ற கருத்தையும் முன் வைத்துள்ளனர். புதிய தேர்தல் மூலமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படாமை, இலங்கையில் அதிகரித்து வரும் ஊழல்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் பிரவேசம், பிற்போடப்பட்ட தேர்தல் போன்றன மக்கள் நம்பிக்கை குறைவடைய காரணமாகியது என கண்டறியப்பட்டுள்ளது.

**மக்களின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையில் தாக்கம் செலுத்திய காரணிகள் தொடர்பாக வினவப்பட்ட போது** ஒளிவுமறைவற்ற வெளிப்படைத்தன்மையை பின்பற்றுவதன் மூலம் ஊழல், மோசடி என்பவற்றை தவிர்ப்பதுடன், பொறுப்புக்கூறுகின்ற தன்மையையும் ஏற்படுத்தலாம். சிறந்த ஆளுகை, வெளிப்படைத்தன்மை, வெற்றிகரமான பின்னூட்டல் முறைகள், நல்லாட்சிக்கான முக்கிய தேவையாக கருதப்படுகின்றது. நிதி கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் தேவைகள் அரசாங்க வெளிப்படைத்தன்மையின் ஒரு முக்கிய அம்சத்தை குறிக்கின்றன. ஊழல் நிலை உண்மையில் உயர்ந்தது என்று கருதும் இலங்கை சூழலில் வெளிப்படைத்தன்மை என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. அரசாங்க அதிகாரம், அரசாங்க நிதி பெரும் ஊழல் (உயர்மட்ட அரசியல் மற்றும் நிர்வாக ஊழல்) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை நெருக்கமாக இணைக்கப்பட்டவை என்பதை நேர்காணலின் போது மக்கள் தெரிவித்தனர்.


பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது மக்கள் நம்பிக்கை செலுத்த சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் அவசியம். மேலும், தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும். தேர்தல்கள் உரிய நேரத்தில், சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படாதபோது, தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பை மக்கள் இழக்கின்றனர்.

மக்களிடம் வினாக்கொத்து மூலமாக கேட்கப்பட்ட வினாவின்படி ஒரு பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் மக்கள் நம்பிக்கையில் தாக்கம் செலுத்தும் சில காரணிகள் அடையாளம் காணப்பட்டது.


அந்தவகையில் அரசாங்க வெளிப்படைத்தன்மை, காலத்திற்கு காலம் தேர்தல், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள், பிரஜைகளின் பொருளாதார திருப்தி, அரசியல் நம்பிக்கை நிலை, அரசாங்க பொறுப்புக்கூறுதல், நல்லாட்சி முறைகள், பங்குபற்றலுக்கான வாய்ப்புகள் என்பன தாக்கம் செலுத்துவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், பின்வருவன தாக்கம் செலுத்துவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





**வரைபடம் 08.** அரசாங்கத்தின் மீதான அரசியல் நம்பிக்கை




**வரைபடம் 09.** மக்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் அரசியல் விழிப்புணர்வு




**வரைபடம் 10.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை அதிகரிக்க தேர்தல் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?




**வரைபடம் 11.** இலங்கையின் ஆட்சி செயன்முறையில் நேரடி ஜனநாயக உத்திகளின் அவசியம்

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மிகப் பெரிய சவாலாக பொருளாதாரப் பிரச்சினைகளை மக்கள் கூறுகின்றனர். இதனை நேர்காணலின் போது அதிகமானவர்கள் பொருளாதார நெருக்கடியானது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வியாகக் குறிப்பிடுகின்றனர். மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் ஆட்சி மேடையில் உள்ளார். இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை மீறிய நடவடிக்கையாக மக்கள் பார்க்கின்றனர். இன்று அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை எவ்வாறு உள்ளது? என்ற வினாக்கொத்தில் குறைவாக உள்ளது என 28 சதவீதமானவர்களும் மிகக் குறைவாக உள்ளது என 14 சதவீதமானவர்களும் நம்பிக்கை இல்லை என 20 சதவீதமானவர்களும் கூறியுள்ளனர். ஆகவே, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளதை காட்டுகின்றது **(வரைபடம் 08)**.

மக்கள் அரசியல் பங்கேற்புடனும் அரசியல் விழிப்புணர்வுகளுடன் உள்ளார்களா? என்பதை பார்க்கும் போது, மிக அதிகம் என 12 சதவீதமானவர்களும், அதிகம் என 42 சதவீதமானவர்களும், குறைவு என 40 சதவீதமானவர்களும், மிகக் குறைவு என 6 சதவீதமானவர்களும் குறிப்பிட்டுள்ளனர் **(வரைபடம் 09).**

**பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த மேற்கொள்ள வேண்டிய பொறிமுறைகள் பின்வருமாறு அமைய வேண்டும் என மக்கள் குறிப்பிடுகின்றனர்.**

- **நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஜனநாயக அவகாசத்தை விட ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.**
- **நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ஊழல் மற்றும் மோசமான நிர்வாகத்தை சரி செய்ய தீர்வு காண வேண்டும்.**
- **நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பொருளாதார அமைப்பை மாற்ற வேண்டும்.**

பொருளாதார வளர்ச்சிக்கான உந்துசக்தியாக ஜனநாயகம் காணப்படும்: ஒரு உறுதியான ஜனநாயக சூழலானது பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாக அமையும். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, வருமான பகிர்வு, உற்பத்தி, விவசாயம், கைத்தொழில், பொருளாதார நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் யாவரும் சமமாக வளர்ச்சியைத் தழுவிக்கொள்ள ஜனநாயக சூழல் அவசியம். ஜனநாயக சூழல் இல்லாத போது, ஆதிக்கம் செலுத்தும் ஒரு பிரிவினர் மேற்கூறிய துறைகளில் பயனடைய ஏனையோர் ஓரங்கட்டப்படுகின்றனர். இதனை இலங்கையில் சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து அவதானிக்க முடியும்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை அதிகரிக்க தேர்தல் அவசியமானது என 84 சதவீதமானவர்கள் குறிப்பிட்டுள்ளனர் **(வரைபடம் 10).**

பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த பின்பற்ற வேண்டிய பொறிமுறைகளில் ஒன்றாக நேரடி ஜனநாயக உத்திகளை ஊக்குவித்தல் காணப்படுகின்றது. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நேரடி ஜனநாயக உத்திகளை பயன்படுத்த முடியும் என கருத்து தெரிவித்துள்ளவர்களை பகுப்பாய்வு செய்யும் போது அவர்கள் நேரடி ஜனநாயகத்தின் உத்திகளை வரவேற்கின்றனர். குறிப்பாக இலங்கையின் ஆட்சிமுறையில் நேரடி

ஜனநாயகத்தின் உத்திகள் அவசியம் என 72 சதவீதமானவர்களும், அவசியமில்லை என 8 சதவீதமானவர்களும், நிச்சயமாக கூற முடியாது என 20 சதவீதமானவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள் (**வரைபடம் 11**).

இதன்படி, இலங்கையில் வினைத்திறனான நேரடி ஜனநாயகத்தின் உத்திகளை மக்கள் வரவேற்கின்றார்கள் எனலாம். இதன்படி ஊழல் அதிகாரிகளை திருப்பி அழைத்தல் முறையை பின்பற்றல், மக்கள் தீர்ப்பு முறையை வலுப்படுத்தல், ஜனநாயகத்திற்கு எதிரான சட்டங்களை இரத்து செய்யும் அதிகாரத்தை கொண்டு வரல், பிராந்திய மக்களின் நேரடி அரசியல் ஈடுபாடு, கிராமிய மக்கள் மத்தியில் அதிகாரத்தை பரவலாக்கம் செய்தல், ஒன்று கூடி முடிவு செய்யும் வாய்ப்பு வழங்கள், மக்களை நேரடியாக அபிவிருத்தி திட்டங்களில் பங்காளராக மாற்றல் போன்ற உத்திகளை பயன்படுத்த வேண்டும் என மக்கள் ஊடாக நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலமாக அறிய முடிந்தது.

மக்கள் தீர்ப்பு முறையை பலப்படுத்த வேண்டும் என 76 சதவீதமானவர்களும் மக்கள் மத்தியில் அதிகாரத்தை பரவலாக்குதல் 46 சதவீதமானவர்களும் ஊழல் அதிகாரிகளை திருப்பி அழைக்கும் முறையைக் கொண்டு வருதல் 44 சதவீதமானவர்களும் ஜனநாயகத்திற்கு எதிரான சட்டங்களை இரத்துச் செய்தல் 38 சதவீதமானவர்களும் கூறியுள்ளனர் (**வரைபடம் 12).** இதில் அதிகமானவர்கள் மக்கள் தீர்ப்பு முறையை பலப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர்.


இன்று பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையின் மீது செல்வாக்கு செலுத்திய பிரதான காரணியாக பொருளாதார நிலைமை காணப்படுவதுடன், இவை தவிர பல காரணிகள் செல்வாக்கு செலுத்தியதை கண்டறிய முடிந்தது. அந்தவகையில் மக்களின் பொருளாதார கஸ்டங்கள், ஊழல் முறைகேடு, குடும்ப ஆட்சி, அதிகார துஸ்பிரயோகம், சர்வாதிகாரம் மற்றும் இராணுவமயமாக்கல், பெரும்பான்மைவாதம், மோசமான அரசின் கொள்கைகள், அரச கட்டமைப்பு பலவீனம் போன்றன கண்டறியப்பட்டுள்ளது**.**

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகள் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக அரசாங்க வெளிப்படைத்தன்மை, காலத்திற்கு காலம் தேர்தல், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள், பிரஜைகளின் பொருளாதார திருப்தி, அரசியல் நம்பிக்கை நிலை, அரசாங்க பொறுப்பு கூறுதல், நல்லாட்சி முறைகள், பங்குபற்றலுக்கான வாய்ப்புகள், உயர்ந்தளவிலான நேர்மை, பரஸ்பரம், ஜனநாயகம் குறித்த அறிவு போன்றன பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளது (**வரைபடம் 13**).


ஒப்பீட்டளவில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது எனலாம். குடும்ப ஆட்சிமுறை, அதிகரித்த ஊழல்கள், அரசியல் உரிமைகள் ஒடுக்கப்படல், மக்கள் பங்கேற்பதற்காக வாய்ப்புகள் மறுக்கப்பட்டமை, ஜனநாயக கட்டமைப்புகள் நீக்கப்பட்டமை, தனிநபர் ஆட்சி சீர்திருத்தங்கள் என்பன பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கிய பிரதான சவால்களாக அடையாளம் காண முடியும்.

இன்று பிரதிநிதித்துவ ஜனநாயகம் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றது. தேர்தல்கள் தொடர்ந்தும் நடாத்தப்படாமை, இளைஞர் அரசியல் செயற்பாடுகள் அடக்குமுறைக்கு உள்ளாகுதல், ஜனநாயகத்திற்கான போராட்டம் அடக்கப்பட்டமை, ஆட்சி முறையில் அதிகரித்து வரும் ஊழல்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் பிரவேசம், அரசாங்க வெளிப்படைத்தன்மையின்மை, சிவில் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகள், ஊடகங்கள் மீதான அடக்குமுறை, அரசியல் உரிமைகள் மீதான மட்டுப்பாடு போன்றன இன்று பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கிய சவால்களாக காணப்படுகிறது (**வரைபடம் 14**).


பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வெற்றி சுதந்திரமான, பக்கச்சார்பற்ற காலாகாலத்திற்கு முறையாக தேர்தல் நடைபெறுகின்ற போதே பிரதிநிதித்துவ ஜனநாயகம் வெற்றி பெறும் எதிர்வரும் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கு ஆர்வமாக உள்ளீர்களா? என்ற வினாவிற்கு 86 சதவீதமானவர்கள் ஆம் எனவும், 4 சதவீதமானவர்கள் இல்லை எனவும், 10 சதவீதமானவர்கள் கூற முடியாது எனவும் கூறியுள்ளனர் **(வரைபடம் 15).** ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கிய சவால்களை இணங்காணல், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த எவ்வாறான பொறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதும் பற்றியும் நடைமுறைப்படுத்தலில் உள்ள சிக்கல்கள் தொடர்பிலும் ஆராய்ந்து பல விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





**வரைபடம் 12.** இலங்கையின் ஆட்சி செயன்முறையில் கொண்டு வரவேண்டிய நேரடி ஜனநாயக உத்திகள்




**வரைபடம் 13.** பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையின் மீது செல்வாக்கு செலுத்திய காரணிகள்




**வரைபடம் 14.** பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கும் சவால்கள்




**வரைபடம் 15.** எதிர்வரும் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கான ஆர்வம்

## 3. ஆய்வுக் கண்டுபிடிப்பும் பரிந்துரையும்

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கையை கண்டறிதல், பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கும் சவால்களை இணங்காணல் என்பவையாகும். இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை மற்றும் அரசாங்கம் மீதான அரசியல் நம்பிக்கை நிலையையும் இதன் மூலம் அடையாளம் காண முடிந்தது எனலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் மக்கள் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் அரசாங்க அரசியல் நம்பிக்கை என்பன குறைந்துள்ளது எனலாம்.

மேலும் இவ்வாய்வுக்கு முதலாம் நிலை தரவுகளான நேர்காணல், வினாக்கொத்து போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், நேர்காணலுக்கு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள், சிவில் சமூகத்தினர், அரசாங்க உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராமத்தலைவர்கள் என 75 பேர் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலமாக 50 பேர் எழுமாதிரியாக தெரிவு செய்யப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் ஆய்வுக்கு கலப்பு முறை பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், கட்டுரைகள், அறிக்கைகள் மூலமாக கோட்பாடுகளைப் பற்றிய தகவல்களைப் பெற உதவியாக இருந்தது.

அதேபோல பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தவறும் போதே மக்கள் போராட்டமாக மாறும் என்பதும் பிரதான கருத்தாக உள்ளது. அதேநேரம் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயக குறித்த அறிவு மக்களிடம் அதிகமாகவே காணப்படுவதை கண்டறிய முடிந்தது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவாக இருப்பதுடன், சில மக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளமைக்கான காரணங்கள் சில கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையில் பல்லின மக்கள் வாழ்வதால் பிரதிநிதித்துவ ஜனநாயமானது பொருத்தமானது என கூறுகிறார்கள். மேலும் இலங்கையின் மக்கள் அறிவுபடைத்த மக்களாக காணப்படல், வலுவான அரசியல் கலாச்சாரம் ஒன்று காணப்படுகின்றமை, ஜனநாயக அரசியலமைப்பு மீதான மக்கள் நம்பிக்கை, கடந்த காலத்தில் ஜனநாயகமற்ற விடயங்களை மக்கள் நிராகரித்து வந்துள்ளமை (18, 20ஆம் சீர்திருத்தங்கள், ஜனாதிபதி முறைமை) போன்ற காரணங்களால் இலங்கையை பொறுத்தவரையில் பிரதிநிதித்துவ ஜனநாயகமானது பொருத்தமானது என மக்கள் நம்புகின்றனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைய பல காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக புதிய தேர்தல் மூலமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படாமை, இலங்கையில் அதிகரித்து வரும் ஊழல்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் பிரவேசம், பிற்போடப்பட்ட தேர்தல் போன்றன மக்கள் நம்பிக்கை குறைவடைய காரணமாகின என கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கை போன்ற ஒரு நாட்டில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பல காரணிகள் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக அரசாங்க வெளிப்படைத்தன்மை, காலத்திற்கு காலம் தேர்தல், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள், பிரஜைகளின் பொருளாதார திருப்தி, அரசியல் நம்பிக்கை நிலை, அரசாங்க பொறுப்பு கூறுதல், நல்லாட்சி முறைகள், பங்குபற்றலுக்கான வாய்ப்புகள், உயர்ந்தளவிலான நேர்மை, பரஸ்பரம், ஜனநாயக குறித்த அறிவு போன்றன பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையில் தாக்கம் செலுத்தும் காரணியாக காலத்திற்கு காலம் தேர்தல் காணப்படுகிறது. இதன் அடிப்படையில் இலங்கையில் மக்கள் போராட்டத்திற்கு பின்னரான காலத்தில் தேர்தல் நடைபெறவில்லை, மேலும் ஜனாதிபதி தேர்தல் மூலம் தெரிவு செய்யாமை காரணமாக பெரும்பாலான மக்கள் இப்போதைய சூழ்நிலையில் தேர்தல் மிக அவசியம் என்று கூறியுள்ளதை ஆய்வில் தெரியவந்துள்ளது. அதேபோல மக்கள் போராட்டத்திற்கு பின்னரான காலகட்டத்தில் சில ஜனநாயக மாற்றங்கள் இடம்பெற்று இருந்தாலும், அது பெரிதளவில் நடைபெறவில்லை என கூறப்படுகிறது.

மொத்தமாக இந்த அத்தியாயத்தை பகுப்பாய்வு செய்யும் போது மக்கள் போராட்டத்திற்கு பின்னரான காலகட்டத்தில் ஒப்பிட்டளவில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது எனலாம்.

இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த எவ்வாறான பொறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதும் பற்றியும், இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் வழியாக நேரடி ஜனநாயக உத்திகளை பயன்படுத்தப்படும் விதமும், இலங்கையில் மக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த பின்பற்ற விரும்பும் நேரடி ஜனநாயக உத்திகள் தொடர்பிலும், நடைமுறைப்படுத்தலில் உள்ள சிக்கல்கள் தொடர்பிலும் ஆராய்ந்து பல விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகமானது பல்வேறு சவால்களை எதிர்கொண்டது என கண்டறியப்பட்டுள்ளது. குடும்ப ஆட்சிமுறை, அதிகரித்த ஊழல்கள், அரசியல் உரிமைகள் ஒடுக்கப்படல், மக்கள் பங்கேற்பதற்காக வாய்ப்புகள் மறுக்கப்பட்டமை, ஜனநாயக கட்டமைப்புகள் நீக்கப்பட்டமை, தனிநபர் ஆட்சி சீர்திருத்தங்கள், தேர்தல்கள் தொடர்ந்தும் நடாத்தப்படாமை, இளைஞர் அரசியல் செயற்பாடுகள் அடக்குமுறைக்கு உள்ளாகுதல், ஆட்சிமுறையில் அதிகரித்து வரும் ஊழல்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் பிரவேசம், அரசாங்க வெளிப்படைத்தன்மை இன்மை, சிவில் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகள், ஊடகங்கள் மீதான அடக்குமுறை, அரசியல் உரிமைகள் மீதான மட்டுப்பாடு என்பன பிரதிநிதித்துவ ஜனநாயகம் எதிர்நோக்கிய பிரதான சவால்களாக அடையாளம் காண முடியும்.

மேலும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த சில பொறிமுறைகள் கையாள வேண்டும் என கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் இருத்தல், அரசியல் நம்பிக்கையை ஏற்படுத்தல், தேர்தலை சரியான நேரத்தில் காலத்திற்கு காலம் நடத்தல், நேரடி ஜனநாயக உத்திகளை ஊக்குவித்தல், அரசாங்க பொறுப்புக்கூறலை ஏற்படுத்தல், மக்கள் மற்றும் சிவில் சமூகங்களை பங்குபற்ற வாய்ப்பு வழங்குதல் போன்ற பொறிமுறைகளை ஏற்படுத்தும் போது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்த முடியும் என பகுப்பாய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்த நேரடி ஜனநாயக உத்திகளை பயன்படுத்த மக்கள் விரும்புவதை கண்டறிய முடிந்தது. இதன்படி ஊழல் அதிகாரிகளை திருப்பி அழைத்தல் முறையை பின்பற்றல், மக்கள் தீர்ப்பு முறையை வலுப்படுத்தல், ஜனநாயகத்திற்கு எதிரான சட்டங்களை இரத்து செய்யும் அதிகாரத்தை கொண்டு வரல், பிராந்திய மக்களின் நேரடி அரசியல் ஈடுபாடு, கிராமிய மக்கள் மத்தியில் அதிகாரத்தை பரவலாக்கம் செய்தல் ஒன்று கூடி முடிவு செய்யும் வாய்ப்பு வழங்கல், மக்களை நேரடியாக அபிவிருத்தி திட்டங்களில் பங்காளராக மாற்றல் போன்ற உத்திகளை பயன்படுத்த வேண்டும் என மக்கள் ஊடாக நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலமாக அறிய முடிந்தது. மேலும் இந்த அத்தியாயத்தில் ஒட்டுமொத்த ஆய்வின் பகுப்பாய்வு, மற்றும் கருதுகோள்படி பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்கள் நம்பிக்கை குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னணி விடயங்களையும் அறிய முடிந்தது.

ஆய்வில் இரண்டு கருதுகோள்களை முன்வைத்து பரிசோதனை செய்யப்பட்டது. அவையாவன:

- **H1:** மக்கள் போராட்டத்திற்கு பின்னர் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை அதிகரித்துள்ளது.
- **H2:** மக்கள் போராட்டத்திற்கு பின்னர் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

இதன்படி ஆய்விற்கு இரு கருதுகோள் எடுத்து பரிசீலனை செய்யப்பட்டது. அதில் முதலாவது எடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்திற்கு பின்னரான பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை அதிகரித்துள்ளது என்ற கருதுகோள் முரண்பட்டு நிராகரிப்பட்டுள்ளது. இதனை பகுப்பாய்வு மூலம் அறிய முடிகிறது. அதேநேரம் ஆய்விற்கு எடுத்த இரண்டாவது கருதுகோள் ஒட்டுமொத்த ஆய்வுகளின்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக மக்கள் போராட்டத்திற்கு பின்னரான பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது என்பது நிருபணமாகியுள்ளது. இதன்படி **மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளது என்பதே ஆய்வின் முடிவாகும்.**

### 3.1 பரிந்துரைகள்

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான மக்கள் நம்பிக்கை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளும், தடைகளும் காணப்பட பல காரணங்கள் உள்ளன. அவற்றை குறைக்க இவ்வாய்வு மூலம் சில பரிந்துரைகள் அவசியமாகின்றன. இதனால் மக்களின் நம்பிக்கையும் குறைவடைந்து போகின்றது. இதனால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த சில பரிந்துரைகள் அவசியமாகின்றன.

- தேர்தல் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டியுள்ளது. அப்போதே தேர்தல் அரசியலில் பெருமளவு மாற்றங்களைக் கொண்டு வரலாம்.
- ஆளுகையிலும் நிர்வாகத்திலும் சீர்திருத்தம் செய்யவேண்டும். அதனால் பெருமளவு ஊழலையும் நிர்வாகச் சீர்கேட்டையும் தடுக்கலாம்.
- ஊழலுக்கான நீதி விசாரணையை விரைவுபடுத்தி நீதிமன்றத்தின் மூலம் நடத்தி குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதும், குற்றப்பின்னணி உள்ளவர்களைத் தண்டிப்பதன் மூலம் அரசியலிலிருந்து அப்புறப்படுத்தி விடலாம். அப்போது ஊழலை குறைக்க முடியும்.
- ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும், ஊழல் மோசடி இல்லாத இலங்கையினை உருவாக்குதல் மற்றும் ஊழலில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.
- அரசியல் வாதிகள் கொள்ளையடித்த சொத்துக்களை மீளப்பெறுவதற்கான சட்டங்களை அறிமுகம் செய்தல் மற்றும் சொத்துக்களை பகிரங்கப்படுத்துதல் தொடர்பான சட்டங்களை பலப்படுத்துதல், அத்துடன் சட்டத்தினை அமுல்படுத்தும் நிறுவனங்களை அரசியல் கலப்பற்ற சுயாதீனமான நிறுவனங்களாக மாற்ற வேண்டும்.
- செயலூக்கமுள்ள பிரஜைகள் மற்றும் தர்க்க ரீதியாக சிந்திக்கும், அரசாங்கத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கும், விமர்சிக்கும் ஆட்சிமுறை செயல்பாடுகளில் ஈடுபாடு காட்டுகின்ற பிரஜைகள் பெரிதும் அவசியம். இந்தவகையில் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் தமது அரசியல் மீதான விழிப்புணர்வு காணப்படுவதோடு அவர்களுக்கு பிரதிநிதித்துவ ஜனநாயகம் தொடர்பான விடயங்கள் வழங்கி அறிவூட்டப்பட வேண்டும்.
- சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பலனை அனைவரும் அடையமுடியும். அனைவருக்கும் சமத்துவம், சமவாய்ப்பு என்பன வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான பரிந்துரைகளை சரிவர ஏற்படுத்துவதன் ஊடாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் மீதான மக்களின் நம்பிக்கையினை மேம்படுத்த முடியும்.

## 4. உசாத்துணைகள்

Anjali, N. (2022). Sri Lanka: Democracy in crisis. *Centre for Independent Studies*. https://www.cis.org.au/publication/sri-lanka-democracy-in-crisis/

District Secretariat-Batticaloa, Ministry of Home Affairs. (2024). *About Batticaloa District*. http://www.batticaloa.dist.gov.lk/index.p

hp/en/about-us/about-batticaloa-district.html

Dunleavy, P., & O'Leary, B. (1987). *Theories of the state: The politics of liberal democracy*. Macmillan Education Ltd.

Horowitz, D. L. (1995). *Democracy in a plural society*. Marga Institute.

Institute for Democracy and Electoral Assistance (IDEA). (2021). *The Global State of Democracy Report 2021*. https://www.idea.int/gsod-2021

Kevin, L. (2019). Social and political trust: Concepts, causes and consequences. *Niskanen Center*. https://www.niskanencenter.org/social-and-political-trust-concepts-causes-and-consequences/

Ortiz, I., et al. (2002). *World protests: A study of key protest issues in the 21st century*. Palgrave Macmillan.

Provincial Irrigation Department. (2024). *Batticaloa Irrigation Region*. http://irrigation.weebly.com/batticaloa_range_tank_details.html

Rambukwella, H. (2022). On the democratic core of the people's uprising in Sri Lanka. *Institute for Human Sciences*. https://www.iwm.at/news/on-the-democratic-core-of-the-peoples-uprising-in-sri-lanka

Samaranayake, N., & Satkunanathan, A. (2023). A year after mass protests, Sri Lanka's governance crisis continues. *United States Institute of Peace*. https://southasiajournal.net/a-year-after-mass-protests-sri-lankas-governance-crisis-continues/

Thanaraj, T. (1996). *Democratic institutions*. Marga Institute.

Thompson, M. (2015). Democracy with Asian characteristics. *The Journal of Asian Studies, 74*(2), 249-272.

Tormey, S. (2006). The contemporary crisis of representative democracy. *Australian Parliament House*. https://www.aph.gov.au/Senate/~/media/E3DB502E53144DD09DF5F345B2C81C31.ashx

Uyangoda, J. (2022, August 16). Bringing democracy back through people's power. *Groundviews*. https://groundviews.org/2022/08/16/bringing-democracy-back-through-peoples-power/

Uyangoda, J. (2022, July 21). Sri Lanka's crisis of representative democracy. *Daily Mirror*. https://www.dailymirror.lk/opinion/Sri-Lankas-Crisis-of-Representative-Democracy/172-237595#

Uyangoda, J., & Peiris, P. (2005). State of democracy in Sri Lanka: A preliminary report. *PCD Journal, 1*(1), 35-48.

Van der Meer, T. W. G. (2017, January 25). Political trust and the crisis of democracy. *Oxford Academic*. https://doi.org/10.1093/acrefore/9780190228637.013.77

சர்ஜுன், ஏ., & றிபான். ஏ. எம். (2012). சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள். இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

திருச்செல்வம் நீ. (1996). சனநாயகமும் மனித உரிமைகளும். இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம்.

யோகராஜா, ஆ. (2020). சமகால அரசறிவியல் ஓர் அறிமுகம். குமரன் புத்தக இல்லம்.

ரமேஸ், ஆர். (2022). தற்போதைய போராட்டங்கள் புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப உதவுமா? சில அவதானிப்புகள். https://maatram.org/?p=10108